RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s824

# ஆசாரக்கோவையில் சமூகக் கட்டமைப்பு

கோ. பூமாரி [அ, *]

[அ] முனைவர் பட்ட ஆய்வாளர், ம.தி.தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி - 627010, தமிழ்நாடு, இந்தியா

# Social Structure in Asara Kovai

K. Boomari [a, *]

[a] Research scholar, M.D.T. Hindu college, Thirunelveli - 627010, Tamil Nadu, India

* Corresponding Author: k.boomari@gmail.com

Received: 25-04-2021
Revised: 27-04-2022
Accepted: 18-05-2022
Published: 20-07-2022

Check for updates

## ABSTRACT

The main purpose of moral literature is to state the virtues that are considered essential to human life. The general nature of the scriptures is to dictate to do these things and to forbid them to do these things. Through such texts one can not only know the concepts, but also the social, cultural and civilization that was in the case at the time the texts arose. In this way one can know the morals necessary for daily life and understand the social structure that was in vogue in the context of that time through Asarakovai, one of the eleven books. The status of social elites, including the aristocracy of society, the so-called lower castes, kings, and women. The relevant structures are recorded in the Asarakovai. It is also possible to realize that such social conditions were the case before the time of Asarakova. Knowing the social structures in the ancient tamil literature will help us to know the way of life of the ancient tamilians and to realize that they continue in today's life

**Keywords:** Etiquette, Brahmins, Moral Literature, Thevaram, Monks.

## முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என வகைப்பாடு செய்யப்பட்ட பதினெட்டு நூல்களுள் பதினொன்று நூல்கள் நீதிநூல்களேயாகும். இவையனைத்தும் மனித சமூகத்திற்கான ஒழுக்கங்களை வரையறுத்துச் செல்கின்றன. அத்தகைய நீதிநூல்களுள் ஒன்றாக விளங்குவது ஆசாரக்கோவை ஆகும். அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய புறந்தூய்மைக்கான ஒழுக்கங்களையும், அகந்தூய்மைக்கான ஒழுக்கங்களையும் அடுக்கிக் கூறும் நூலாக ஆசாரக்கோவை விளங்குகிறது. வடமொழி சாஸ்திரங்களாகிய ஸ்மிருதிகளில் கூறப்பட்ட நீதிக்கருத்துக்கள் ஆசாரக்கோவையில் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளன. இந்நூலில் காணலாகும் சடங்குகள், வழிபாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அறிவதன் வாயிலாக, அன்றைய காலத்தில்வாழ்ந்த அந்தணர்கள், அரசர்கள், பெண்கள், குடிமக்கள் ஆகியோர் பெற்றிருந்த சமூக நிலைகளை விளங்கிக் கொள்ளலாம். மூத்தோர்களை மதித்தல், உணவு உண்ணும் முறை, நீர்நிலைகளைப் போற்றுதல், நீராடும் முறை, கடவுளை வழிபடும் முறை போன்ற பல்வேறு வாழ்வியல் ஒழுக்கங்களை ஆசாரக்கோவை தொகுத்துரைத்துள்ளது. இவ்வாறு ஆசாரக்கோவையில் கட்டமைக்கப்பட்டுள்ள வாழ்வியல் ஒழுக்கங்கள் அரசர், அந்தணர் ஆகியோரை உயர்குடியினராகவும், பெண்கள், புலையர்கள் ஆகியோரை அடிமை வர்க்கத்தினராகவும் சித்தரித்துள்ளன. அத்தகைய சமூக நிலைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆசாரக்கோவை -ஓர் அறிமுகம்

ஆசாரம் என்ற வடசொல்லுக்கு ஒழுக்கம் என்பது பொருளாகும். கோவை என்னும் தமிழ்ச்சொல்லுக்கு தொகுப்பு என்பது பொருளாகும். ஆசாரங்களைத் தொகுத்துக் கூறும் நூல் என்று ஆசாரக்கோவைக்குப் பொருள் கொள்ளலாம். திருவள்ளுவரும் ஆசாரம் என்ற சொல்லை

"அச்சமே கீழ்களது ஆசாரம்"

என்று ஒழுக்கம் என்னும் பொருளிலேயே கையாண்டுள்ளார் (Parimelazhagar, 2012). ஆசாரக்கோவையில் இடம்பெற்றுள்ள "ஆசார வித்து", "ஆசாரம் எப்பெற்றியானும் படும்", "ஆசார வீடு பெற்றார்" என்னும் பாடல் அடிகளில் ஆசாரம் என்னும் சொல் ஒழுக்கம் என்பதையே குறிக்கிறது. இந்நூலை இயற்றியவர் கயத்தூர் பெருவாயில் முள்ளியார் ஆவார். நூலாசிரியர் பெயர், வாழ்ந்த ஊர், அவர் சார்ந்த சமயம், நூல் செய்யப்பட்ட விதம் ஆகியவற்றை நூலின் சிறப்புப் பாயிரமே உணர்த்துகிறது. இந்நூலில் "யாவரும் கண்ட நெறி", மிக்கவர் கண்ட நெறி", "முந்தையோர் கண்ட முறை" நல்அறிவாளர் துணிவு", "பேரறிவாளர் துணிவு", நூல்முறையாளர் துணிவு", என்று பாடல்களின் இறுதியில் கூறப்பட்டுள்ளதால் இவருக்கு முன்னரே இத்தகைய நல்லொழுக்கங்களைக் கூறும் நூல்கள் இருந்திருக்கலாம் எனக் கருதுவதற்கு இடமுண்டு. ஆசார வித்து முதலாக ஆசாரவீடு பெற்றார் இறுதியாக நூறு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. வெண்பாவின் வகைகளாகிய நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, சவலை வெண்பா ஆகிய வெண்பா வகைகள் ஆசாரக்கோவையில் இடம்பெற்றுள்ளன. நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய புறந்தூய்மைக்கான நல்லொழுக்கங்களைக் கூறுவதோடு அகத்தூய்மைக்குரிய நல்லொழுக்கங்களையும் இந்நூல் வகுத்துரைத்துள்ளது.

## பார்ப்பார் நிலை

ஆசாரக்கோவையை இயற்றிய கயத்தூர் பெருவாயில் முள்ளியார் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதை அந்நூலின் சிறப்புப்பாயிரம் உணர்த்தக் காணலாம். வைதிக சமயங்களாகிய சைவமும், வைணவமும் பார்ப்பனர்களாகிய அந்தணர்களை முதன்மைப்படுத்தி வந்திருப்பதைச் சமயங்களின் வரலாறுகள் மூலமாக அறியலாம். அவ்வகையில் வடநூல் சாத்திரங்களைத் தழுவி இயற்றப்பெற்ற ஆசாரக்கோவையும் பார்ப்பனர்களை சமூகத்தின் மேல்தட்டு மக்களாக உயர்த்திப் பிடிப்பதை அதன் பாடல்கள் வாயிலாக அறியலாம். ஐம்பூதம், பசு, திங்கள், ஞாயிறு ஆகியவற்றுக்கு நிகராக பார்ப்பாரும் மதிக்கப்பட்டனர் என்பதை,

"ஐம்பூதம் பார்ப்பார் பசு திங்கள் ஞாயிறு

தம்பூதம் மெண்ணா திகழ்வானேல் தன்மெய்க்கண்

ஐம்பூதம் அன்றே கெடும்"

என்னும் பாடல் உணர்த்தக் காணலாம் (Tamilpiriyan, 2012). சைவ சமயக் குரவர்களுள் ஒருவராகிய திருஞானசம்பந்தரும்,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்"

என வாழ்த்தியுள்ளார் (Rathinavelan, 2004). இதனோடு அல்லாமல், பார்ப்பார்கள் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்பட்டு வந்த நிலையை,

"இருதேவர் பார்ப்பா ரிடை போகார்"

என்று குறிப்பிடுவதன்மூலம் அறியலாம்

குலத்தாலும், ஒழுக்கத்தாலும் சிறந்து விளங்குகின்றவர்களும், நான்மறைகளை ஓதுகின்றவர்களுமாகிய அந்தணர்களை தம்முடைய குரவர்களைப்போல மதித்து ஒழுக வேண்டும்

என்னும் சமூகக் கட்டமைப்பு பெருவாயில் முள்ளியார் காலத்தில் இருந்து வந்ததை அவர்தம் பாடல்கள் உணர்த்துகின்றன (Tamilpiriyan, 2012).

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்

மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு

ஆற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்

போற்றி யெனப்படு வார்"

என்று சமூகத்தின் மெல்லியலாளரோடு பார்ப்பாரும் போற்றப்பட்டு வந்த அக்காலச் சமுதாய நிலையை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது (Tamilpiriyan, 2012).

மேலான நல்வினைகளைச் செய்யும் காலத்து அந்தணரிடமே நல்ல நாள் கேட்டுச் செய்தல் வேண்டும். சோதிடம் கூறும் சில கீழ்மக்களிடத்தில் நாள் கேட்டுச் செய்தல் கூடாது. ஏனென்றால், அந்தணர்கள் கூறிய சொற்கள் எந்நாளும் பொய்த்தது இல்லை என்னும் பொருள்பட,

"தலைஇய நற்கருமஞ் செய்யுங்கால் என்றும்

புலையார் வாய்நாள் கேட்டுச் செய்யார்- தொலைவில்லா

அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்க அவர் வாய்ச்சொல்

என்றும் பிழைப்ப திலை"

என்று அந்தணர்களின் சமூகமதிப்பு உயர்ந்து விளங்கியதை ஆசாரக்கோவை பதிவு செய்துள்ளது (Tamilpiriyan, 2012).

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட"

என்று சிலப்பதிகாரத்தில் தொடங்கி இன்றுவரையிலும் நற்கருமங்களுக்கும் இறப்புச் சடங்குகளுக்கும் அந்தணர்களையே முன்நிறுத்தும் சமூகநிலை தொடர்ந்து வருவது இங்கு ஒப்புநோக்கிச் சிந்திக்கத்தக்கதாகும். இவ்வாறு அந்தணர்களாகிய பார்ப்பனர்களை உயர்குடி மக்களாகப் போற்றிய சமூகக் கட்டமைப்பை ஆசாரக்கோவை தெளிவுறக் காட்டியுள்ளது (Manikkavasagam, 2010).

## மன்னர்கள் நிலை

சங்க காலச் சமூகத்தில் மன்னர்களே நாட்டின் உயிர்நிலையாகக் கருதப்பட்டனர். இந்நிலையை,

"நெல்லும் உயிர்அன்றே; நீரும் உயிர்அன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்ற மோசிகீரனாரின் பாடல்வழி அறியலாம். தண்குடை வேந்தர்க்கு பண்ணுடை புலவர்கள் தகுந்த வேளைகளில் அறிவுரை வழங்கியதும், அறிவுடை வேந்தர்கள் அவற்றை இனிது ஏற்றுக்கொண்டமையும் புறநானூற்றுப் பாடல்களால் அறியக் கிடைக்கின்றன (Balasubramanian et al., 2010).

"யானைபுக்க புலம் போல

தானும் உண்ணான் உலகமும் கெடுமே"

என்ற அழகிய உவமை தோற்றிய பிசிராந்தையாரின் பாடல் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு மக்களிடம் வரி வசூலிக்கும் முறையை விளக்குகிறது (Balasubramanian et al., 2010).

சங்கம் மருவிய காலத்தில் மன்னன் சொல்லுக்கு மறுசொல் கூறாதவர்களாக மக்கள் வாழ்ந்துள்ளனர். அரசன் செயல்களில் வெறுப்பு கொள்ளுதல் கூடாது; அரசன் கூற்றோடு மாறுபடக்கூறுதல் ஆகாது; காகம் வெண்ணிறம் உடையது என்று மன்னன் கூறினாலும் மறுத்து மொழிதல் கூடாது என்னும் பொருள்பட,

"முனியார் துனியார் முகத்தெதிர் நில்லார்

தனிமை யிடத்துக்கண் தம்கருமம் சொல்லார்

இனியவை யாமறிது மென்னார் கசிவின்று

காக்கைவெள் என்னும் எனின்"

என்று ஆசாரக்கோவை எடுத்தியம்புகிறது (Tamilpiriyan, 2012). எத்தகைய செல்வராயினும், அறம், திருமணம், வீடு, முயற்சி ஆகியவற்றில் மன்னனைக் காட்டிலும் மேம்பட்டுச் செலவு செய்தல் ஆகாது. அவ்வாறு செய்தால் அவர்களிடம் உள்ள செல்வம் கெடும் என்று குறிப்பிடுவதன் மூலம் மன்னனே எந்நிலையிலும் உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்னும் வாழ்வியல் கட்டமைப்பு அக்காலத்தில் நிலவியதை உணரமுடிகிறது. மேலும், அரசன், உபாத்தியாயர், தாய், தந்தை, தனக்கு மூத்தோர் ஆகிய ஐவரையும் தெய்வத்தைப் போல் மதித்துத் தொழ வேண்டும் (பாடல்-16) என்று வரையறுத்தலால் அரசன் தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற சமூக நிலையை ஆசாரக்கோவை கட்டமைக்க முயன்றுள்ளதை அறிய முடிகிறது.

## மகளிர் நிலை

ஆண்மயச் சமூகத்தில் பெண்கள் ஆண்களின் உடைமைப் பொருளாகவே பார்க்கப்பட்டு வந்திருக்கின்றனர். நீதி இலக்கியமாகிய ஆசாரக்கோவையிலும் பெண்கள் ஆண்களால் பேணிப் பாதுகாக்கப்படும் ஒரு உடைமைப் பொருளாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையை,

"தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்று

உன்னித்து வைத்த பொருளோ டிவை நான்கும்

பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க உய்க்காக்கால்

மன்னிய ஏதம் தரும்"

என்னும் செய்யுள் உணர்த்துகிறது (Tamilpiriyan, 2012). மகளிர்கள், தன்னுடைய தலைமகன் வடிவத்தை அல்லாது வேறு ஆடவரின் உடல்வடிவை நோக்குதல் கூடாது; தன்னுடைய மேனி அழகையும் நோக்குதல் கூடாது; தலைமயிரினைக் கோதுதல், கைந்நொடித்தல் போன்ற தீய பழக்கங்களைச் செய்தல் கூடாது. நற்குடியில் பிறந்த மகளிர்கள் இத்தகைய நல்லொழுக்கங்களை உடையவர்களாக விளங்குவர் என்பதை,

"தம்மேனி நோக்கார் தலையுளரார் கைந்நொடியார்

எம்மேனி ஆயினும் நோக்கார் தலைமகன்

தன்மேனி அல்லால் பிற"

என்று கூறுவதால், பெண்டிர்க்கு கற்பு அவசியம் என்ற சமூகக் கட்டமைப்பை உணர்ந்து கொள்ளலாம் (Tamilpiriyan, 2012). பிறன்மனை நயத்தலை ஒரு பாவச்செயலாக ஏனைய நீதிநூல்கள் கண்டிப்பது போலவே ஆசாரக்கோவையும் பிறன்மனை விரும்புதலை கொடிய நரகத்திற்குச் செல்லும் வழி என்று கடிந்துரைக்கிறது. இதனால் பிறன்மனை நயவாத நல்லொழுக்கத்தை ஆடவர்கள் கடைப்பிடித்தால் மனையுறை மகளிர்கள் இன்புறுவர் என இல்லற ஒழுக்கத்தை ஆசாரக்கோவை இனிதே உரைத்துள்ளது.

## வேசையர் நிலை

சங்க காலத்தும், காப்பியக் காலத்தும் இருந்துவந்த பரத்தமை ஒழுக்கத்தை நீதிநூல்கள் அனைத்தும் வன்மையாகக் கடிந்துரைத்துள்ளன. அறநூல்களுள் தரையாயதாகிய திருக்குறளில்,

"வரைவுஇலா மாண்இழையார் மென்தோள் புரைஇலாப்

பூரியர்கள் ஆளும் அளறு"

என்று குறிப்பிடுகிறது (Parimelazhagar, 2012).

பிறன்மனை நயத்தலைக் கண்டித்தலைப் போலவே, விலைமகளிரிடம் பழகுதலையும் ஆசாரக்கோவை வன்மையாக இடித்துரைக்கிறது. தம் கண்ணின் ஒளியும், புகழும் கெடாதிருக்க விரும்புபவர்கள் மின்னல், எரிமீன், வேசையர் கோலம், காலை மற்றும் மாலை வெயில் ஆகியவற்றை உற்றுப்பார்த்தல் கூடாது என்னும் ஒழுக்க வரையறையை,

"மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமும்

தம்மொளி வேண்டுவார் நோக்கார் பகற்கிழவோன்

முன்னொளியும் பின்னொளியு மற்று"

எனக் கூறியிருத்தலால் வேசையர்களைக் கண்ணால் காண்பதுகூட உடல்கேடும், புகழ்க்கேடும் உண்டாகும் என்ற சமூக மனநிலையை ஆசாரக்கோவை சித்தரித்துள்ளது (Tamilpiriyan, 2012). பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வகையில் நீதிநூல்களுள் ஒன்றாகிய ஏலாதியும்,

"பாடகஞ் சாராமை பாத்திலார் தாம்விழையும்

நாடகஞ் சாராமை நாடுங்கால்- நாடகம்

சேர்ந்தார் பகைபழி தீச்சொல்லே சாக்காடே

தீர்ந்தாற்போற் நீரா வரும்"

என்னும் பாடலில், பொதுமகளிரின் பாட்டைக் கேட்பதும், ஆட்டத்தைக் காண்பதும் கூடாது (Gowmarieeshwari, 2012). அவ்வாறல்லாமல் அவற்றைக் கேட்பதும் காண்பதும் பகை, பழி, கடுஞ்சொல், சாக்காடு ஆகிய துன்பங்கள் வந்துசேரும் என்று வேசையர் நட்பைக் கடிந்துரைத்துள்ளது.

பொதுமகளிர்களாகிய வேசையர்கள் வாழும் இடங்களுக்கு அருகே வாழ்தல் கூடாது. அவ்விடங்கள் தமக்கு மிகுந்த உரிமை உடையனவாக இருந்தாலும் அவ்விடத்தில் குடியிருத்தலைத் தவிர்த்தல் வேண்டும் பொதுமகளிரின் வாழ்விடங்களுக்கு அருகே குடியிருந்தால் மனைவியரின் எண்ணங்களும் மாறுபடும் என்றும் ஆசாரக்கோவை கூறுகிறது.

"வண்ண மகளிர் இடத்தொடு தம்மிடம்

ஒள்ளியம் என்பார் இடம்கொள்ளார் தெள்ளி

மிகக்கிழமை உண்டெனினும் வேண்டாவே பெண்டிர்க்கு

உவப்பன வேறாய் விடும்."

என உரைத்தலால் வேசையர்களைக் காண்பது மட்டுமலாமல் அவர்கள் வாழும் இடங்களுக்கு அருகிலும்கூட குடியிருத்தல் நல்லொழுக்கமாகாது என வேசையர்கள் சமூகத்தின் இழிந்த பிறவிகளாகக் கருதப்பட்ட சமுதாய நிலையை இப்பாடல்கள்வழி அறியலாம் (Tamilpiriyan, 2012).

## புலையர் நிலை

சமுதாயத்தில் கீழ்மக்களாகக் கருதப்பட்டவர்களை "புலை", "புலையர்", "புல்லர்", என்னும் சொற்களால் ஆசாரக்கோவை குறிப்பிட்டுள்ளது. நீராட வேண்டிய பத்துக் காரணங்களுள் கீழ்மக்கள் மெய் தீண்டிய இடத்து ஒன்றாகச் சுட்டப்படுவதால் கீழ்மக்களைத் தொடுதல் தூய்மைக்குறைவாகக் கருதப்பட்ட சமூகச் சூழ்நிலையை உணரலாம். எச்சிலை உடையவராய் புலையரை நோக்குதல் கூடாது (பாடல்-6), புலையர் உண்ட உணவு யாதென வினவுதல் கூடாது (பாடல்-86), பெரியோரையும், புலையரையும் முறைப்பெயர் சொல்லி அழைத்தல் கூடாது (பாடல்- 80) போன்ற செய்திகள்

 DOI: 10.34256/irjt22s824

கீழ்மக்களாக மதிக்கப்பட்ட புலையரின் வாழ்வியல் நிலையை உணர்த்திச் செல்கிறது. சோதிடம் முதலியவற்றில் கீழ்மக்களாகிய புலையர்கள் அறிவு பெற்றிருந்தாலும் அவர்கள் வாய்ச்சொல் கேட்டு நற்கருமங்கள் செய்தல் கூடாது; அந்தணர்கள் வாய்ச்சொல் கேட்டு நற்கருமங்களைச் செய்தலே சிறந்தது. ஏனென்றால் அந்தணர்கள் வாய்ச்சொல் என்றும் பொய்த்துப்போவதில்லை என்று குறிப்பிடுவது புலையரைத் தாழ்த்துவது மட்டுமல்லாமல் அந்தணரின் இடத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சி என்று கருதுவதற்கும் இடமுண்டு. இவ்வாறு புலையர்களை சமூகத்தின் கடைமாந்தர்களாக ஆசாரக்கோவை கட்டமைத்துள்ளது.

## முடிவுரை

இலக்கியங்கள் மனித வாழ்க்கையிலிருந்தே முகிழ்ப்பனவாகும். ஒவ்வொரு இலக்கியமும் அது எழுந்த காலத்தைப் பிரதிபலிக்காமல் இருக்க இயலாது. இலக்கியங்களை வாசிப்பதன்மூலம் அவ்விலக்கியம் எழுந்த காலத்து விளங்கிய சமூகப் பண்பாட்டு நிலைகளை அறிந்து கொள்ளலாம். சங்கம் மருவிய காலத்து இலக்கியமாகிய ஆசாரக்கோவையின் வாயிலாக அக்காலகட்டத்து சமுதாய மாந்தர்களின் நிலைகளை ஒருவாறு விளங்கிக் கொள்ளலாம். சமுதாயத்தின் மேல்தட்டு மக்களுக்கு அளிக்கப்பட்ட மதிப்புநிலைகள், கீழ்மக்களது இழிவுநிலை, சமூகத்தில் பெண்கள் பெறும் இடம்,ஆகியவற்றையும் ஆசாரக்கோவை கூறியுள்ள நல்லொழுக்கங்கள் ஊடாக ஆராய்ந்து அறியலாம்.

## References


Balasubramanian, K.V., Visvanathan, A., Nagarajan, V., Arokiasamy, R., Thilagavathi, G., Sathiyanathan, V., (2007) Purananoru Mulamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Gowmarieeshwari, (2012) Elaathi, Saratha Pathippagam, Chennai, India.

Manikkavasagam, G., (2010) Silappathikaram, Uma Pathippakam, Chennai, India.

Parimelazhagar, (2012) Thirukkural, Palaniappa Brothers, Chennai, India.

Rathinavelan, S., (2004) Arputha Pathikangal, Thirumurai Mantram, Kovilpatti, India.

Tamilpiriyan, (2012) Asarakkovai Nanmanikkadikai (Mulamum Uraiyum), Karpagam Puthakalayam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License